அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-600 006.

பத்தாம் வகுப்பு / மேல்நிலை துணைத் தேர்வுகள் ஜூன் / ஜூலை 2026

அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் (Original Mark Certificates) வழங்குதல்

செய்திக் குறிப்பு

ஜூன் / ஜூலை 2026 பத்தாம் வகுப்பு / மேல்நிலை துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்களுக்கு (மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு முடிவு உட்பட) **அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல்கள்** 13.10.2026 **(செவ்வாய்கிழமை)** அன்று காலை 10.00 மணி முதல் வழங்கப்படும். தேர்வர்கள் அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலேயே சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம். மேலும், கூடுதல் விவரங்களை தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

நேரடித் தனித்தேர்வர்கள் (Direct-Private Candidates) தேர்வுக்கு விண்ணப்பிக்கும்போது சமர்ப்பித்த அசல் மதிப்பெண் / மாற்றுச் சான்றிதழ்களை இதுவரை அவர்கள் பெற்றுக்கொள்ளாமல் இருப்பின் அவரவர் தேர்வெழுதிய தேர்வு மையத்திலேயே பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-

இயக்குநர்

தேதி: 12.10.2026

இடம்: சென்னை– 600 006.